(இ) டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8 /1993), மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1993) ஆய்வுக்கு @ எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

பிற்பகல் 1-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்த 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகம், சென்னை பொறுத்த சட்டத்தில் 30 ஆம் பிரிவில் உட்பிரிவு 1-ல் ஒரு திருத்தத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதில் பழைய உட்பிரிவு 1—Faculty of Basic Medical Science என்பது இங்கே விடுபட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது சர்க்குலேட் பண்ணியிருக்கிறார்கள். அந்தத் திருத்தத்தை இப்போது அமைச்சரே கொடுக்கிறார். அதைப் பிரிவுவாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளும்போது முன்மொழிவார். அந்தத் திருத்தத்தையும் சேர்த்து நீங்கள் பேசலாம்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மருத்துவப் பல்கலைக் கழகம் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக் கழகமாகும். Basic Medical Sciences–Pathology M.D., Bacteriology, Bio-Chemistry

---

@ 2—4—1993 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

போன்றவை இன்னும் சென்னைப் பல்கலைக் கழகத்திலேயே இயங்கி வருகின்றன. அது இந்தச் சட்டத்தில் விடுபட்டுள்ளது. சென்னைப் பல்கலைக் கழகத்திலிருந்து காமராஜ் பல்கலைக் கழகம் பிரிந்தபோது, ஒரு பகுதியைப் பிரித்துக் கொடுத்ததுபோல், மருத்துவப் பல்கலைக் கழகத்தில் இருக்கிற பேசிக் மெடிகல் சையன்சையும் மருத்துவப் பல்கலைக் கழகத்திற்குக் கொடுக்க வேண்டும். அது இந்தச் சட்டத்தில் விடுபட்டிருக்கிறது. அதை மீண்டும் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சுந்தரராஜன் அவர்கள் சொல்கிறபோது சொன்ன திருத்தம், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குக் கொடுத்து, அது உறுப்பினர்களுக்குச் சுற்றனுப்பப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே எம்.ஜி.ஆர். யூனிவர்சிட்டிக்கு மெட்ராஸ் யூனிவர்சிட்டியிலிருந்து எடுத்து கொடுக்கப்பட்டுவிட்டது. ஒவ்வொரு பேகல்டியும் தனித்தனியாக இருந்தால்தான், அந்தந்த பேகல்டியிலே இருப்பவர்கள் கவுன்சிலிலே போட்டி போட முடியும். அந்தக் கவுன்சிலுக்கு இங்கேயிருந்து மெம்பராக அனுப்ப முடியுமென்ற காரணத்தாலே இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனவேதான் இதைச் செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன திருத்தம் இதிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது. எனவே இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

[1993 ஏப்ரல் 29

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தன் திருத்தத்தை முன்மொழியலாம்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I move the following amendment in clause 2 in the proposed sub-clause (1) of section 30, add the following as sub–items(a)

(a) Faculity of basic Medical sciences; and re-letter sub-items (a) to (i)as sub-items (b) to (j).,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்படுகிறது.

பிரிவு 2, திருத்தப்பெற்றபடி, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1993) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு, திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

(ஈ) எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகுப் பேரவைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1993), மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 9/1993) ஆய்வுக்கு @ எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 7—4—1993 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS